குயில்

பதிவெண்: எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர்:

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 21-10-58 செவ்வாய் | இசை: 21

அன்னை தன் மகளுக்கு

கல்வி நலம்

அறியாத சின்னஞ் சிறுகிளிக்குப் - படிப்
பல்லவோ நல்லறிவு விளக்கு?
யாதும் (அறியாத)

குறியாகப் பள்ளிசெல்ல வேண்டும் - நீ
குறையாத செல்வம்பெற வேண்டும்
யாதும் (அறியாத)

கற்றவர் விழிகளே விழிகள் - கல்வி
கல்லாதவர் விழிகள் குழிகள்
பெற்றிடு வார்நல்ல வழிகள் - கல்லாப்
பேதைகளுக் குண்டாகும் பழிகள்
யாதும் (அறியாத)

மாணிக்க உதடுகள் திறக்கும் - மலர்
வாயில் தமிழ்முத்துக்கள் பிறக்கும்
கோணல் வழக்கமெல்லாம் பறக்கும் - கற்றுக்
கொண்டாலன் றேவாழ்வு சிறக்கும்
யாதும் (அறியாத)

நல்லதென்றும் கெட்டதென்றும் தெரியும் - கற்றால்
நம்குறள் உண்மைப்பொருள் புரியும்
இல்லற விளக்குநன் றாய் எரியும் - கல்வி
இருந்தால்தான் புகழ்உலகில் விரியும்
யாதும் (அறியாத)

இருட்டில் இருப்பதிந்த உலகம் - கால்
இட்ட இடத்திலெல்லாம் கலகம்
கருத்தாய் இருந்தால்திமை விலகும் - நல்ல
கல்வியி னால்வாழ்க்கை இலகும்
யாதும் (அறியாத)

நானே நீ!

எனக்கு வந்த துனக்கு வந்ததே
யான்வேறு; நீவே றென்ப துண்டா?
என்று பொன்னி எல்லிக்குக் கூறினாள்.

அடுத்தநாள் பொன்னிக் கைம்பது வெள்ளி
பணவிடை வந்தது பணத்தை எண்ணி
எல்லி பெற்றே பொன்னி என்றே
கையெ ழுத்தும் கடிதில் இட்டாள்.

பொன்னிக்கு மின்விளக்குப் பொதுவரி கட்ட
ஐம்பது வெள்ளி இல்லை ஆதலால்
நடவ டிக்கை வருமென்று நடுங்கினாள்
ஊர் நகைக்குமென் றுயிரை விட்டிடத்
தாம்பொன்று கையில் தாங்கி நிற்கையில்
உனக்கு வந்த பணவிடை எனக்கென்று
நம்பி ஐம்பதை நான்பெற்றுக் கொண்டேன்
என்றே சொல்லி நின்றாள் எல்லி!

பொன்னி எல்லிக்குப் புகலு கின்றாள்:
எனக்கு வந்த துனக்கு வந்ததே
யான்வேறு நீவே றென்ப தில்லை
தூய்மின் விளக்குத் துறைத்த னத்தார்
என்மேல் எடுக்கும் நடவ டிக்கையால்
மானம் வண்டியில் ஏறு கின்றது
தூக்கிட்டுக் கொள்ளத் தூக்கினேன் கயிற்றை
எனக்கு வந்த துனக்கு வந்ததே
யான்வேறு நீவே றென்ப துண்டா?
இந்தா என்றாள் பொன்னி!
இந்தா ஐம்பதும் என்றாள் எல்லியே!

குறிப்பு:- *வெள்ளி-ரூபாய். பணவிடை-மணியார்டர். மின்விளக்கு-எலக்டிரிக்லைட். பொதுவரி - அரசினர் வரி. நடவடிக்கை - வழக்கு. தாம்பு-கயிறு. தூய்-தூய.*

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௯ ஐப்பசி ௫.

சென்னையாட்சி வாழ்க!

அரிசியைத் தமிழ்ச்சான்றோர் உயிர்மருந்து என்றார்கள். உயிர் வாழ்க்கைக்கு அரிசி இன்றியமையாதது என்பதை அவர்கள் விளக்கினார்கள்.

அத்தகைய-உயிர்மருந்து, இந்தக் கண்மூடி ஆட்சியிலும், தமிழர்க்கு வேண்டிய அளவு கிடைக்கின்றது; விளைகின்றது! ஆனால், அது தமிழர்க்குக் கிடைக்கும்படி ஆட்சியாளர் காப்புத்தரவில்லை.

காப்பளிக்காதது மட்டுமா? பெருமுயற்சி செய்து வேறு நாட்டுக்குக் கொண்டுபோகிறார்கள் ஆட்சியாளர்கள்.

கொண்டுபோகின்றார்கள் என்பது மட்டுமா? கொண்டுபோவதை ஒத்துக்கொள்ளுவதில் பெருமை கொள்ளுகிறார்கள் மானங்கெட்டவர்கள்!

ஒத்துக்கொள்ளுவது மட்டுமா? அயலார்க்கு அனுப்பி வருவதற்கு ஒரு பொய்க் காரணத்தையும் கூறுகின்றார்கள் கொடியவர்கள்!

வரலாற்றுப்பெருமைகொண்ட தமிழர்கள் இன்று பாலுக்குச் சர்க்கரை கேட்கவில்லை. கூழுக்கு உப்புக்கேட்கின்றார்கள்! இரங்கத்தக்க நிலை!

அரிசி இல்லை – இது, தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழனின் நெஞ்சமும் பாடும் பஞ்சைப்பாட்டு. இந்த வகையில் தமிழர்கள்! அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

ஒன்றுபட்ட தமிழர்கள் துன்பம் துன்பம் என்கின்றார்கள் அதுவே எமக்கு இன்பம் இன்பம் என்றார்கள் போலும் ஆளவந்தார்கள். ஒன்றுபட்ட தமிழர்கள் வேர்த்து ஆடுகின்றார்கள்! ஆளவந்தார் கூட்டம் கூத்தாடுகின்றது!

ஒன்றுபட்ட தமிழர்கள் விழுந்தழுகின்றார்கள். ஆளவந்தார் கூட்டம் எழுந்து சிரிக்கின்றது. அப்படியானால் இன்றைய ஆட்சி நிலை குறைகொள்ளிப் பிணத்தின் நிலை என்பதா?

ஆயிரமுறை கூறிவிட்டோம் நேருவின் பழிவாங்கும் போக்கைச் சென்னை நல்லதொரு சாக்காகக் கொள்ளக்கூடாது என்று.

நலிந்து வருகின்றது சென்னை ஆட்சி! நல்ல மருந்து ஒன்றுதான்! அதை இன்றே அருந்த வேண்டும்.

தமிழ்நாட்டு அரிசி-நெல் மலையாளத்திற்கு ஒருமணி கூடப் போகக்கூடாது. போகிறதா இல்லையா என்று பார்த்துக் கொண்டிருப்பது தமிழ்மக்கள் வேலையாக இருத்தல் கூடாது. ஒரு ரூபாய்க்கு அவர்கள் சென்னைப்படியால் குறைந்தபங்கு இரண்டுபடி நல்ல அரிசி பெற வேண்டும்.

இந்தநிலை உடனே ஏற்படவேண்டும்.

நாம் சென்னை ஆட்சியை வாழச்சொல்லுகின்றோம்.

புதுச்சேரியில்!

அரிசிச் செய்தியில் புதுவை அரசினர் விழிப்போடு இருக்கவேண்டும்.

வேண்டுமென்று கொண்டால் வெண்ணெய் போற கொள்ளலாம். அரிசி மலிவான விலைக்குக் கிடைக்க வேண்டுமே என்று

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

மளிகை

இது தமிழ்ச் சொல்லா? விளக்கித்தருக என ஓர் அன்பர் கேட்கின்றார். மலிகை என்ற தூய தமிழ்ச்சொல் மளிகை என்று மருவிற்று. ஆதலின் தமிழ்ச் சொல்லே. அன்றியும் ஒரு தமிழ்ச் சொல் சிறிது வேறுபாடுற மருவினாலும் அதன் தூய்மை கெடாது என்ற உண்மையை மனதிற் கொள்க. ஆகவே, மளிகை என்பது தமிழ்ச்சொல் என்று மட்டும் சொல்லி அமையாமல், தூய தமிழ்ச்சொல் என்றே சொல்லுக.

மலிகை - நிறைதல் பெருகல் இத்தொழிற் பெயர் மலிதல் எனத் தல் இறுதிநிலை பெற்று வரும்.

இனி மளிகை எனில், பல்பொருள் நிறைதல் என்க. மளிகைக்கடை எனின், பல்பொருள் நிறைந்த விற்பனை இல்லம்.

பூ

பூ என்பது பூமி உலகத்தைக் குறிக்கும் போது அது வடசொல் அல்லவா என்றார் ஷெ அன்பர். அன்று அது தூய தமிழ்ச்சொல்லே,

பூமேவு புல்லைப் பொருந்து குமரேசர் என்பதற்கு மலர் மேவிய சோலையுள்ள புல்வயல் என்ற ஊர் என்று ஒரு புலவர் பொருள் கூறியிருந்ததும் நம் நினைவுக்கு வருகின்றது. அது பிழை. பூமேவு - உலகில் அமைந்த என்றுதான் பொருள் கூறவேண்டும்.

பூ, எனினும் மலர் எனினும் உலகையே குறிக்கும் என்பது எதனாற் பெறப்படும் எனிற் கூறுவோம்:

இவ்வுலகுக்குத் தமிழர் முதலிற் கொடுத்த எண்ணூல் என்ற தத்துவ நூலில் (கபிலம், கபிலசாங்கியம்) ஆதி அதாவது முதன்மை (மூலப் பிரகிருதி) யை அரும்பு என்றும், தன் மலர்ச்சியை - மலரை இந்த உலகம் என்றும் சொல்லி வைத்தார் திருவாரூர்க் கபிலர். அன்று தொடங்கியே பூ உலகுக்கு வழங்கலாயிற்று. வடவரும் அதைஅப்படியே எடுத்தாண்டார்கள். எண்ணூலையும் வடமொழியில் பெயர்த்தார்கள் அன்றோ. திருக்குறளில் வரும் மலர்மிசை ஏகினான் என்பதில்வரும் மலருக்கும் உலகுஎன்றே பொருள் கொள்ள வேண்டும் இவ்வாறு பொருள் கொள்ளத் தவறியதால், அதற்குப் பலவாறு பொருள் கூறி இருக்கிறார்கள் பலர்.

எனவே, பூ உலகைக்குறிக்கையிலும் அது, தூய தமிழ்ச்சொல்லே என்க.

புதுவை அரசினர் நினைத்தால் அடுத்தவினாடியே வெற்றிகாண முடியும். இன்று புதுவை மக்கள் அடைந்துள்ள இரங்கத்தக்க நிலையை அவர்கள் என்றுமே நுகர்ந்ததில்லை.

எக்கேடுகேட்டாலும் நமக்கென்ன என்று இருக்கத்தக்க ஒரு பெரிய ஆற்றல் இன்றைய ஆட்சியாளர்க்கு வந்துவிடவில்லை.

உடனே அரிசி, புதுவையில், குறைந்த அளவு புதுவைப் படியால் ஒரு ரூபாய்க்கு நாலு படி கிடைக்கும்படி விரைவு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8--50,
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0–15 (பதினைந்து) காசு) அஞ்சல் தலைகள் அனுப்புக.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி கஙு

இடம்: *பச்சைக்கிளியின் வீடு.*

காலம்: *நடுப்பகல்.*

உறுப்பினர்: *பச்சைக்கிளி, பச்சைக்கிளியின் கணவன் மான்வளவன், மருத்துவச்சி, பொன்னன்.*

காட்சித் தலைப்பு:

அவள்மேல் ஐயம்

நிலைமை: *மருத்துவச்சி வருகின்றாள். பச்சைக்கிளியும் பொன்னனும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.*

பச்சை: பள்ளிக்குச் செல்வது உனக்குப் பெருங்கசப்பு-சென்றுவிட்டால் அங்குச் சிறிது நேரம் தங்கியிருப்பதும் பிடிக்கின்றதில்லை.

பொன்னு: அப்பா இலந்தம்பழம் கொண்டாருவாங்க இல்ல.

(இதற்குள் மருத்துவச்சி வந்துவிடுகின்றாள், பையன் தெருவில் விளையாடப் போய் விடுகின்றான்)

மருத்துவச்சி: என்ன செய்கின்றது.

பச்சை: இரண்டுதடவை வயிறு போயிற்று

மருத்துவச்சி: ஏன்?

பச்சை: பொரி விளங்காய் உருண்டை பின்னும் இரண்டு – ஆசையாய் இருந்தது - உண்டேன்.

மருத்துவச்சி: எதிர்வீட்டு ஏந்திழையம்மா வந்து விரைவாக வா விரைவாக வா என்றார்கள். என்னமோ ஏதோ என்று ஓடி வந்தேன். இது தானே. இதோ மூன்று சரக்கையும் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி இறக்கிச் சிறிது இனிப்புச் சேர்த்துக் குடிக்கவேண்டும் அவ்வளவுதான்.

பச்சை: அவர் வரும் நேரம். தெருக் கதவைச் சாத்திக்கொண்டு அடுப்படியில் இருந்து நீங்களே காய்ச்சிக்கொடுக்கவேண்டும். அவருக்குத் தெரியவே கூடாது. அவர் வந்து கதவைத் தட்டினால் நீங்கள் கொல்லை வாயிலால் போய் விடுங்கள்.

மருத்துவச்சி: தெரிந்தால் என்ன?

பச்சை: தெரியவேகூடாது, அவர் படித்துப் படித்துச் சொன்னார் பொரி விளங்காய் உருண்டை உண்ணாதே உண்ணாதே என்று. கேட்கவில்லை. ஆதலால்தான் தெரியக்கூடாது என்கிறேன்.

(மருத்துவச்சி புறக்கட்டில் அடுப்படி நோக்கிச் செல்கிறாள். சிறிது நேரம் செல்லக் கணவன் வந்து கதவைத் தட்டுகின்றான்.)

மான்வளவன்: பச்சைக்கிளி!

பச்சை: இதோ வந்துவிட்டேன்.

(ஓசை கேட்டு மருத்துவச்சி கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு போகிறாள்)

மான்வளவன்: *(உள்ளே வரும் போதே)* அங்கே யார் சமையல் கட்டில்?

பச்சை: கலகலத்த கதவு! காற்றுவசத்தால் அப்படித்தான்! அதென்ன அத்தான் கையில்.

தமிழர் யார்?

மன்னு தமிழ்க்குடியாம் வாழையடி வாழைஎன
இந்நிலத்தில் எங்குறைவா ரும்தமிழர் — பன்னும்இந்த
வாய்ப்பில்லார் தம்மை,அவர் வைப்பாட்டி மக்களை
ஏற்கமாட் டோம்தமிழர் என்று.

மான்வளவன்: மாறுகாலம். இலந்தைக் கனி இவ்வளவுதான் கிடைத்தது இந்தா ஐந்துதான்.

(இதற்குள் பொன்னன் வந்து விடுகின்ருன்)

பொன்னன்: எனக்கப்பா இலந்தம்பழம்!

மான்வளவன்: அதில் தம்பிக்கு ஒன்று கொடு!

(கொடுத்துவிட்டு மற்ற நான்கு பழங்களையும் படுக்கையில் தலையணிக்குக் கீழே வைக்கிருள்)

பச்சை: ஏன் இத்தனை நாழிகை இன்று? உணவை முடித்துக் கொள்ளுங்கள். தம்பி, கைகால் கழுவிக் கொள்.

(இலையிடுகின்ருள் வட்டிக்கின்ருள். உண்ணுகிருர்கள்)

உணவுண்ட பின்:-

மான்வளவன்: தம்பி பள்ளிக்குப் போனதுண்டா?

பச்சை: போனதுண்டு தூக்கிக் கொண்டு போனதால். உடனே வந்ததுண்டு ஆசிரியர் ஏமாந்ததால்.

பொன்னு: ஆசிரியர்தாம்பா அனுப்புனரு.

மான்வளவன்: ஏன் அனுப்பிவிட்டார்?

பொன்னு: தண்ணீர் குடிக்கனுமின்னேன்.

மான்வளவன்: அங்கேயே தண்ணீர் கொடுப்பார்களே.

பொன்னு: ஆமாம். எங்கம்மா அந்தத் தண்ணீரைக் குடிக்க வாண்டாமின்னுங்கன்னு பொய்யடிச்சேன்.

மான்வளவன்: பொய் பேசலாமா தம்பி?

பொன்னு: *(கலக்கம்)* இனிமே இல்லப்பா!

மான்வளவன்: பச்சைக்கிளி நான் விரைவாகப் போக வேண்டும்.

(போகின்ருன்)

காட்சி கச

இடம்: *பச்சைக்கிளியின் வீடு.*

காலம்: *மாலை.*

உறுப்பினர்: *தூயன், பொன்னு, பச்சைக்கிளி, மான்வளவன்*

காட்சித் தலைப்பு:

பிணப் பெட்டி

நிலைமை: *பொன்னன், தெருத் திண்ணையில் இரண்டு இலந்தைக் கனிகளை உருட்டி விளையாடிக் கொண்டிருக்கையில் அம்மருங்கு தாடிக்காரர் வருகின்ருர்.*

தாடி: ஏன் தம்பி நாழிகை ஆகின்றதே பள்ளிக்கு வரவில்லையா?

பெரியாரின் (பஞ்சசீலம்) ஐந்தொழுக்கம்

(12-10-58) சீர்காழியில் சொற்பெருக்காற்றிய தோழர் S. T. விவேகியவர்கள் குறிப்பிட்ட பெரியார் பஞ்சசிலத்தைத் தமிழர் நினைவிற் பதியுமாறு வெண்பா ஆக்கப்பட்டது)

வெண்பா

1 சாதிஒழிப் 2 பாரியர் சாற்றுமத நூலொழிப்பே
3 கோதுமனப் பார்ப்புக் குடிஒழிப்பே - 4 ஓதற்
கரிய தன்மானம் 5 தமிழ்நா டடைதல்
பெரியாரின் ஐந்தொழுக்கம் பேசு.

(அடைதல் என்பதைத் தன்மானம் என்பதனேடும் சேர்க்க)

பொன்னு: சரி இதோ வந்துவிடுகின்றேன். (உள்ளே போக முயலுகிறான்)

தாடி: (இடைமறித்து) அதென்ன தம்பி கையில்? இங்கு வா! காட்டு!

பொன்னு: (ஓடி அவன் அருகில் நின்று) இலந்தம்பழம்! அஞ்சி கொண்டாந்தாங்க. எனக்கு ஒண்ணு குடுத்தாங்க மீதியை அம்மா வாங்கி, அப்பறம் உண்ணுவதாகச் சொல்லித் தலையணையின் அடியிலே வச்சிகிட்டுத் தூங்கறுங்க. நானு அவுங்களுக்குத் தெரியாமே இப்ப ரெண்டு எடுத்துக்கிட்டு வந்துட்டேன். ஆனுபழம் நல்லா இல்லே.

தாடி: எனக்குக் கொடுத்துவிடு.

(கொடுத்துவிட்டு உள்ளே ஓடிச் சுவடியுடன் பள்ளிக்குப் போகின்றான்)

மற்றொருபுறம் *முன் மாலை.*

தெருவில் தன் கையிலுள்ள இரண்டு இலந்தைக் கனிகளேயும் வெளிப்படையாகக் காட்டியபடி—அவைகளை உற்று ஆராய்வான் போலத் தாடிக்காரன் நடந்து செல்லுகின்றான். எதிரில் பச்சைக்கிளியின் கணவன் வருகின்றான் இலந்தைக் கனிகளை அவன் பார்க்கின்றான்.

மான்வளவன்: ஐயா இலந்தைக் கனிகளா? இன்னும் கிடைக்குமா? எங்கே கிடைத்தன?

தாடி: ஒருத்தி வழியாகக் கிடைத்த அன்பளிப்பு! அவள் கணவன், ஐந்து பழம் தேடிப் பிடித்து அவளுக்குத் தந்தான். அவள் அவற்றில் ஒன்றைத் தன் பையனுக்குக் கொத்துவிட்டு மீதிநான்கை வைத்திருந்தாள். அதில் இரண்டை எனக்குக் கொடுத்தாள் அப்போதே அவளுக்குச் சொன்னேன் நீதான் கருத்தாங்கி இருக்கின்றாய் உனக்குத்தான் இலந்தைமேல் ஆசை என்று அவன் கேட்கவில்லை மறுத்தால் வருந்துவாள்.

(போகின்றான் தாடி! ஓடுகிறான் பச்சைக் கிளியின் கணவன் தன் வீடு நோக்கி)

பச்சைக்கிளி எழுந்தவள் மீண்டும் படுத்து தூங்குகின்றாள். மனக்கொதிப்புடன் வந்த மான்வளவன் அவள் தூங்குவதை உற்று நோக்கிப் பின, அவள் தலையணையை மெதுவாகத் தூக்கிப் பார்க்கின்றான். இரண்டு இலந்தைக்கனிகளேயே அவன் பார்க்கின்றான். வீட்டில் மற்றொருபுறம் ஓடிக் கத்தியை எடுத்துக் கொண்டு அறையில் நுழைகின்றான்.

முன் கதைத் தொடர்ச்சி

அரசன்: (மான்வளவனை நோக்கி) வெட்டி விட்டாயோ!

மான்வளவன்: ஆம் பல வெட்டுகள்! பெட்டியில் போட்டு, வைத்தேன் அன்றிரவு தோப்புக் குட்டையில் அமிழ்த்தினேன். ஆதலால் நான் கொலையாளி! தூக்குத் தண்டனைக்கு உரியவன்! நான் சாக வேண்டும்.

தூயன்: என்னல் நேர்ந்த கொலை. நான் கொலையாளி! நான் சாக வேண்டும்.

இவ்விளக்கத்தை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த அரசன், அமைச்சன், அனிச்சை, பிசிராந்தையார் முகங்களில் மகிழ்சியும் துன்பமும் மாறிமாறிக் காட்சியளிக்கின்றன.

அரசன்: தீர்ப்பை பின்னர் அறிவிக்கின்றேன்.

மீண்ட தமிழகத்தில்

மீட்சித் தமிழகத்தில் மேன்மைத் தமிருக்கே
ஆட்சி கொடுப்போம் அறம்அதுதான் — மாட்சித்
தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் தமிழன்
தமிழன் எனப்படுதல் தப்பு.

பாவலர் வாக்குமூலம்

∝○∝

1. திராவிட நாட்டின் தந்தை பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின் தலைமையில் இயங்கும் திராவிடர் கழகத்தில் நான் ஒரு தொண்டன்.

2. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளும் திராவிட மொழிகள். அவைகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் திராவிடர்கள். தென்னாட்டில் சுமார் பத்துகோடித் திராவிடர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வாழும் பகுதியைத் திராவிடநாடு என்றும், அந்த நாடு உலகில் இங்கிலாந்து போன்ற ஏனைய சுதந்திர நாடுகளைப் போலத் தனியாகப் பிரிந்து இயங்க வேண்டும் என்றும் சென்ற பல ஆண்டுகளாகத் திராவிடர் கழகம் பாடுபட்டு வருகிறது. தற்காலச் சூழ்நிலையின் காரணமாகச் "சுதந்திரத் தமிழ் நாடு" முதலில் அமைந்தால் போதும் என்ற கொள்கையுடன் திராவிடர் கழகம் இயங்கி வருகிறது.

3. திராவிடர் கழகத்தின் ஒப்பற்ற தலைவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் பலஆண்டுகளாகச் சுதந்திரப் போராட்டங்கள் முதல் பல போராட்டங்களில் ஈடுபட்டுக் கடைசியாகத் தழிழர்கள், தமிழ் நாடு மட்டிலுமாவது வாழ்ந்தால் போதும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். புத்தர் இயேசுநாதர், நபிநாயகம், காரல் மார்க்ஸ், ஆபிரகாம் லிங்கன், காந்தி போன்ற சமுதாயம், பொருளாதாரம், அரசியல் துறைகளில் பெரும்சீர்திருத்தங்களைக் கண்ட உலகப் பெருமக்கள் பட்டியலில் வைத்துப் போற்றப்படத் தக்கவர் பெரியார் ஈ. வெ. இராசாமி.

4. இந்தியாவின் பிரதமர் நேரு 9-12-57 ல் திருச்சி பொதுக்கூட்டத்தில் பேசும்போது பெரியார் அவர்களை அவதூறாகப் பேசிப் பெரியார் அவர்கள் மூட்டை முடிச்சுகளுடன் நாட்டைவிட்டு ஓட வேண்டும் என்று சொன்னார். திராவிடர் கழகத் தொண்டனானதால் அதைக் கேள்விப் பட்டதும் மனம் புழுங்கி வேலூர் கூட்டத்தில் நேரு சொன்னது காட்டுமிராண்டித்தனம் என்று விளக்கி நேருவின் படத்தை மக்களிடம் காட்டி இதைத் தொடலாமா? நம் வீட்டில் தொங்கவிடலாமா? என்று கேட்டேன். கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒரே குரலில் அந்தப் படத்தைக் கொளுத்து கொளுத்து என்று சொன்னார்கள். மக்கள் விருப்பப்படி நான் கொளுத்தினேன். அது குற்றமல்ல.

5. தமிழ் மொழி பேசுகிறவர்கள் எல்லாம் தமிழர்கள் அல்ல. வெள்ளைக்காரர்கள், ஜெர்மனியர்கள் தமிழைப் படித்துத் தமிழில் பேசினால் அவர்களைத் தமிழர்கள் என்று சொல்ல முடியுமா? அதே மாதிரி ஆங்கிலம் பேசும் பிரஞ்சுக்காரன் ஆங்கிலேயன் ஆகமுடியுமா? பிரஞ்சுபேசும் ஆங்கிலேயன் பிரஞ்சுக்காரன் ஆக மாட்டான்.

6. தமிழ் நாட்டில் வாழும் பார்ப்பனர்கள் சமஸ்கிருதம் தேவமொழி என்றும், அதுதான் தங்களின் தாய் மொழி என்றும், அதனால் அவர்கள் உயர்ந்தவர்கள் என்றும்சொல்லி நடைமுறையில் கையாண்டும்வருகிறார்கள்.

7. சமஸ்கிருத மொழி ஆண்டவனால் எழுதப்பட்டதாகச்சொல்லும் வேதம், புராணம், இதிகாசம் சாஸ்திரம் ஆகியவைகளில் பார்ப்பனர்களைத் தெய்வப்பிறவி, உயர்ந்தவர்கள்என்றும், மற்றவர்கள் அவர்களுக்கு வேலை செய்யக் கடமைப்பட்ட அடிமைகள் என்றும் இருப்பதால் மக்கள்இனத்தில் பெரும் பகுதியானவர்களை மடமையில் ஆழ்த்தி வருகிறார்கள் பார்ப்பனர்கள்.

8. உதாரணமாக:—

"யத்தரிணம் யவ மத்தி நபுஷ்டம் பக மன்யதே
சூத்ரா யதர்ய ஜாரா நபோஷாய தனாயிதி"

இதன் பொருள்:—

பயிரை மேயும் மானைப் பார்த்துப் பயிரின் சொந்தக்காரன், மான் சுகத்தை அடையுமே என்று எண்ணாமல் இம்மான் பயிரைத் தின்றுவிட்டதே என்று வருத்தப்படுவதைப் போல் ஆரியர்களால் புணர்ச்சி செய்யப்பட்ட தன் மனைவியைப் பார்த்துச் சூத்திரன் துன்புறுகிறான் என்பது இது போன்ற எண்ணற்ற ஆயிரக் கணக்கான சமஸ்கிருத ஸ்லோகங்களைப் படித்து ஆரியப் பார்ப்பனர்களால் ஏற்படும் இப்படிப்பட்ட துவேஷங்களை நீக்கத்தான் காரணங்கள் காட்டிப் பேசி வருகிறேனே தவிர நானாக எந்தச் சமஸ்கிருத ஸ்லோகத்தையும் உண்டாக்கிப் பேசவில்லை.

9. திராவிடர் கழகம் ஆண்டவன் படைப்பில் மக்களுக்குள் உயர்வு, தாழ்வு, இல்லை, எல்லோரும் சமம் என்று பிரச்சாரம் செய்து வருகிறது; தமிழ் நாட்டிலுள்ள மக்களிடையே இருக்கும் ஜாதி, மத,

உணர்ச்சிகளை அகற்றி எல்லோரும் ஓர் குலம் என்ற உணர்ச்சியின் அடிப்படையில் நல்வாழ்வு வாழவேண்டும் என்ற பெருநோக்கத்துடன் பிரச்சாரம் செய்து வருகிறது. நானும் திராவிடர் கழகத் தொண்டன் என்ற முறையில் கடந்த 25 ஆண்டு காலமாக அதேநோக்குடன் பணியாற்றி வருகிறேன் எனக்கு யார்பேரிலும் எவ்விதத் துவேஷ உணர்ச்சியும் கெட்ட எண்ணமும் கிடையாது. பார்ப்பனர்களுக்கு மக்களிடையே உயர்வு, தாழ்வு இருக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணம் இல்லாதிருந்தால் அவர்களும் திராவிடர் கழக நோக்கங்களையும், பிரச்சாரங்களையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அரசாங்கமும் பேச்சளவில் ஜாதிகள் ஒழிய வேண்டும் என்று சொல்லி வருகிறது. உண்மையாகவே ஜாதிமத வித்தியாசங்கள் இல்லாத சமுதாயம் உருவாக வேண்டும் என்று எண்ணினால் அரசாங்கமும் கழக முயற்சிக்கு ஆதரவு தர வேண்டுமே ஒழியக் கழகத்தொண்டர்கள் பேரில் வழக்குகள் போட்டுத் தொல்லைகள் கொடுப்பது நியாயமே ஆகாது.

10. நமக்குமுன் வாழ்ந்த சித்தர்கள், நாயன்மார்கள் போன்ற பெரியார்களும் கழகக் கொள்கைகளையே வலியுறுத்தியிருக்கிறார்கள். அதைவிட நான் கடுமையாக ஒன்றும் பேசவில்லை. அவர்கள் சொன்னதை அச்சிட்டுப் புத்தக வடிவில் மக்களிடையே பரப்பி வருவதை அரசாங்கம் தடை செய்யவில்லை.

11. 1957ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் பேரில் பார்ப்பனர்களைக் கொலை செய்யும்படி மக்களைத் தூண்டிவிட்டதாகக் குற்றம் சாட்டி அரசாங்கம் வழக்குத் தொடுத்தது. அதில் அவர் எதிர்வழக்காடவில்லை. 14-12-57ல் ஆறு மாத சிறைத் தண்டனை விதித்து அவர்களை அரசாங்கம் சிறையில் தள்ளிற்று.

12. அதன் பிறகு நேரு அரசாங்கமும் சென்னை அரசாங்கமும் சூழ்ச்சிசெய்து என் போன்ற திராவிடர் கழகத் தொண்டர்களை எப்படியாவது அடக்கிவிடவேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இதுமாதிரி வழக்குகள் தொடர்ந்திருக்கின்றன. திராவிடர் கழகம் ஒருநாளும் பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டதல்ல. மக்களிடையே அராசகம் உண்டுபண்ணக்கூடிய அளவில் வேலை செய்யக் கூடியதுமல்ல. நான் பேசிய பேச்சில் எப்பொழுதும் மக்களிடையே சொல்லப்பட்ட கருத்துக்கள்தான் இருக்கின்றனவேயொழியப் புதிதாக ஒன்றுமில்லை.

13. மக்களிடையே துவேஷ மனப்பான்மை ஏற்படக்கூடிய உயர்வு, தாழ்வு கற்பிக்கக் கூடிய காரியங்களை அகற்ற வேண்டிய அரசாங்கத்தின் வேலையைக் கழகமும், நானும் அமைதியான முறையில் செய்துவருவதைப்பற்றி அரசாங்கம் மகிழ்ச்சி கொள்ளாமல் வழக்குத் தொடுத்திருப்பது உலக அதிசயங்களிலேயே ஒன்றாக இருக்கிறது. நான் நிரபராதி. எவ்விதக் குற்றமும் செய்யவில்லை.

14. சித்தர்கள், நாயன்மார்கள், பெரியார்கள் போன்றவர்கள் அருளிய கருத்துக்கள்:

திருமூலர் அருளிய திருமந்திரமாலையாகிய திருமந்திரத்தில்

"மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும்; பெருவாழ்வும், மன்னனும்
பீடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்து
ஆடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே"

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்
[தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாமென்றே
சீர்கொண்டநந்தி தெரிந்துரைத் தானே" என்றும்

உலகமேதை திருவள்ளுவரின் ஞானவெட்டியானில்

"வியாசர்சொல்லும் பாரதத்தில் வெகுபொய்
[வீணும்
மேதினியோர் மாய்கையினில் விரும்பிச் சொன்னார்
ஆய்ந்துகவி பாடிவிட்டான் கம்பன் வம்பன்
அதிதரா மாயணத்தில் அனேகம் பொய்தான்
சாயாம லதிவீர பாண்டியன் சொல்லும்
தமயேந்தி சாத்திர நைடதமும் சொன்னார்
சுய மகாதிதுகவின் சுத்தப் பொய்தான்
தொடுகவி மாணிக்க வாசகர் சொன்னாரே"

"தேவாரமான திருவாசகத்தை
செகத்தோர்கள் படித்து மெத்தத் தியங்கினார்கள்
பேயான ஆண்டிகட்குப் பிழைப் புக்காகப்
பேசிவைத்தார் மற்றொன்று பிசகே இல்லை
சாவாதார் மாய்கைதனில் அடிபட்டோர்க்குத்
தளர்ந்த பின்பு ஞானவிதி சாராதென்னில்
தூவாத சாந்தவொளி அறிந்தோரல்ல
சுக்கிலமு மழிந்த பின்பு துலங்கார்தானே"

என்றும்

தனிப்பாடற்றிரட்டில் காளமேகப்புலவர்:-

"சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா-திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே உனைஒருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்" என்றும்

அவ்வை:-

"நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்ச
[மராம்
கோலெனிலோ வாங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியு மாவான் வழித்துணை யாவான்
அந்த அரசே அரசு" என்றும்

பாம்பாட்டி சித்தர்:—

"சாதிப் பிரிவிலே தீமூட்டுவோம்" என்றும்

திருக்கலம்பகத்தில்:—

"நீதிகெட ஓதுமறை வேதியர்கள்" என்றும்

கம்பர்:—

"முட்டிபுகும் பார்ப்பார் அகத்தை எட்டிப்
பாரோமே" என்றும்

கபிலர்:—

"பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்
... ...
நால்வகைச் சாதியை நாட்டினீர் நாட்டினில்"
என்றும்

பத்திரகிரியார்:—

சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்
[யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவதெக்காலம்"
என்றும்

இராமலிங்க சுவாமிகள்:—

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீரழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவ ரொருத்தரவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாமல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே"
என்றும்

சிவவாக்கியர்:—

"பறைச்சி யாவதேதடா பனத்தி யாவதேதடா
இறைச்சி தோலெலும்பினு மிலக்கமிட்டி ருக்குதோ
பறைச்சிபோகம் வேறதோ பனத்திபோகம்
[வேறதோ
பறைச்சியும் பனத்தியும் பகுத்துப்பாரு மும்முளே"

"சாதி யாவதேதடா சலந்திரண்ட நீரெலாம்
பூதவாச லொன்றலோ பூதமைந்து மொன்றலோ
காதில்வாளி சாரைநம்பி பாடகம்போ லொன்றலோ
சாதிவேதமோதுகின்றதன்மைஎன்னதன்மையோ"
என்றும்

பாரதியார்:—

"துஷ்டப் பாப்பு" என்றும்

பாரதிதாசன்:—

"இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்
சுருட்டுகின்றார் தம் கையில் கிடைத்தவற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே இல்லை யாயின்
விடுதலையும், கெடுதலையும் ஒன்றேயா"

"தறுக்கினால் பிறதேசத்தார் தமிழன்பால் என்
[நாட்டான்பால்
வெறுப்புறும் குற்றம்செய்தார் ஆதலால் விரைந்
[தன்னாரை
நொறுக்கினார் முதுகெலும்பைத் தமிழர்கள் என்ற
[சேதி
குறித்தசொல் கேட்டின்பத்திற் குதிக்குநாள்
[எந்தநாளோ" என்றும்

இவ்வாறு எண்ணற்ற உலகமேதைகள் பாடியுள்ளார்கள்.

15. பார்ப்பனர்கள் தமிழர்களைத் தொடாதே, தமிழர் வீடுகளில் உண்ணாதே, தமிழன் இல்லத்தில் திருமணம் செய்து கொள்ளாதே, தமிழர்கள் சூத்திரர்கள் என்று தன் இன மக்களுக்குச் சங்கராச்சாரியார் உள்படப் பார்ப்பனர்கள் சொல்லிவருவது போல் என் இனமக்களாகிய தமிழர்களுக்கு நம்மைச் சூத்திரர்கள்என்று பார்ப்பனர்கள் சொல்லி பகிஷ்காரம் பண்ணுவதால் தமிழர் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் பார்ப்பனர்களுக்கு நல்ல புத்தி வரவும் பார்ப்பனப் பகிஷ்காரம் செய்யும்படி பொதுமக்களை நல்ல எண்ணத்துடன் கேட்டுக் கொண்டேனே தவிர எவ்வித கெட்ட எண்ணத்துடனும் பேசவில்லை.

அண்ணாத்துரையா . . .

என்ற பகுதி கவிஞர் வெளியூர் செல்ல நேர்ந்ததன் காரணமாக இந்த இதழில் வரவில்லை. அடுத்த இதழில் வரும்.

அமைச்சர்.

(சென்ற இதழ்த்தொடர்ச்சி)

தேன்

"சித்தன்"

*உருசியர்கள் தேன்பெருமை உணர்ந்தோர்; அந்நா
 டுற்றபிணி யாளரெலா முண்பார் தேனை!
செருமுனையிற் புண்பட்டார்; தீப்புண் கண்டார்;
 தீராத புண்ணுற்ரு ரிவர்கட் கெல்லாம்,
ஒருமருந்தாய்த் தேனங்கே உதவக் கண்டோம்;
 உட்குடலின் புண்தீர்க்க உண்பா ரிஃதை!
உருக்குலைக்கும் *நோயணுவை ஒழிக்க எண்ணில்.
 உண்ணுக தேன்! நிறைவுணவாம் உயர்தேன்
 சொன்னேன்.

*உருசியர் : *ரஷ்யர்*
*நோயணு : *நோய்க்குக் காரணமான கிருமி*

என்புருக்கி யால்வாடும் எளியோர்க் கெல்லாம்
 இன்தேனோர் *அரைக்காற்சேர் ருசியர் தந்தார்;
என்புருக்கி யுற்ரோர்கட் கெடைகூ டிற்றே!
 இருமல்குறைந் தோடியது; குருதி யோடே,
பென்ன உடல்பெற்ருர்; போயிற் றிந்நோய்!
 புண்ணுற்றே வாடுவயி றுடையார் நாளும்
*நன்றரையே அரைக்கால்சேர் நற்றே னுண்டே
 நன்ருஞர்! வானமுதம் நற்றேன் கண்டாய்!

*அரைக்கால்சேர்: *சுமார் 100 முதல் 150 கிராம்*
*அரையே அரைக்கால்சேர்: *சுமார் 600 கிராம்*

நம்நாட்டு மருத்துவர்தேன் பெருமை தன்னை
 நன்ருக உணர்ந்தவர்கள்! மருந்தின் வன்மை,
இம்மிகுறை யாமல்தேன் காக்கும்; இஃதால்
 எதற்குமிவர் தேனென்ருர்! ஈரல், மூளை,
நம்தீனிப் பை,மார்பு, நன்மண் ணீரல்,
 நமைக்காக்கும் நுரையீரல் தமைக்காக் குந்தேன்!
வெம்மைதரும்; குருதியினைத் தூய்மை யாக்கும்;
 வெவ்விடத்தின் வீறழிக்கும்; விளைக்குந் தாதே!

பசிவிளைத்தே ஓட்டிவிடும் பலநோய் தன்னைப்
 பல்வேறு கூட்டாலே பயன்வெவ் வேரும்!
புசிப்பார்க்கு நல்லின்பம் புதுத்தேன் நல்கும்!
 புரிந்திதனைக் கைக்கெள்ளின் புலன்கள் நன்ரும்;
கசிதேனை வரலாற்றுக் காலத் தின்முன்
 கண்டவர்நாம்! இன்றதனைக் கவியில் காண்போம்
புசியாரோ தமிழர்தேன்! இன்பம் பெற்றே,
 புதுவாழ்வில் உயர்ந்துடலைப் பொன்ஞக் காரோ?

வளர்க்குதம்மா!

≮ படப்பை, கதைப்பித்தன். ≯

வளம்பெருகும் தஞ்சையிலே
 வாழ்ந்துவரும் வண்டினந்தான்
வளமான செந்தமிழை
 ஓயிலாக வாழ்த்துதம்மா!

வற்ருத காவிரியோ
 குற்றமிலாப் பைந்தமிழை
போற்ருது போனலோ
 பொழுதேபோ காதம்மா!

கண்குளிர்ந்த மாமலர்கள்
 தண்மையான தென்றலிலே
பண்பாடி ஆடுவதில்
 பைந்தமிழ்தான் மணக்குதம்மா!

தண்ணொளியை விண்ணுலகில்
 திகழ்மதிதான் தந்திட்டே
பண்தவமும் நன்தமிழை
 எண்ணியே ஏத்துதம்மா!

சான்ருேர்வாழ் புதுவையிலே
 சிறப்பான நற்'குயில்'தான்
தேன்போலும் பண்பாடித்
 தேன்தமிழை வளர்க்குதம்மா!

நச்சினார்க்கு நஞ்சா? அமிழ்தா?

கயல்விழி

எழில் தவழ்ந்து அழகு பெருகி வளஞ்செறிந்த இயற்கை அழகினை, நுனித்து நோக்கிக் காதலித்து வியந்து இயற்கைத்திறம் பிறழாமல் இன்னிசைப் பாவாக யாத்து வடித்தெடுத்தனர் – பழந்தமிழ்ப் புலவர்கள்.

அவர்கள் தமது உணர்வின் வழி உலக இயற்கையினை நிறுத்திக் கொள்ளாமல், அவ்வுலக இயற்கையின் வழித் தமது உணர்வினை நிறுத்தி ஓங்கு புகழ் உலகம் வியக்கும் வண்ணம் பாட்டின்கண் ஓவியம் எழுதிக் காட்டினாற்போன்று, அவ்வியற்கை நிகழ்ச்சிகளை அப்படியே நம் கண்முன் கொணர்ந்து நிறுத்தும் கூர் அறிவுத் திறன்பெற்று உரனுற்று விளங்கினர்.

இனி இதற்கு மாறாக வடமொழி வாணர்கள் எவ்வாறு பொருந்தாப் புனைவுகளை அள்ளி நுழைத்துச் செய்யுள் யாத்துள்ளனர் என்பதை "நீராருங் கடலுடுத்த" என்ற எழில் வாழ்த்தை மொழி வாழ்த்தாய்த் தமிழ்க் குமரிக்குச் சூட்டிச் சென்ற சீராளர் "மனோன்மணீயம்" சுந்தரம்பிள்ளை அவர்கள்.

பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே

என்று கூறிப் போந்தார்.

"திருமுருகாற்றுப்படை முதலிய பத்துப் பாட்டல்கள் அடங்கிய சங்கத் தமிழ் நூல்களில் மனம் பற்றியவர்கள் இம்மியளவும் பொருளிலக்கணத்துக்குப் பொருந்தாத (வடமொழிக்) கற்பனையில் மனம் பற்றுவார்களா" என்பது இதன் பொருள்.

அண்மையில் பத்துப்பாட்டு, குறுந்தொகை புறப்பொருள் ஆகிய நூல்கட்குத் தமிழ் மரபுக்கு ஏற்பப் பொருள்கண்ட பெருமழைப் புலவர் அவர்கள் வடவரின் பொருந்தாப் புனைவுகளைப் பற்றிக் குறித்திருக்கும் கீழ்வரும் பொருளுரையை எண்ணுக

"வடமொழி முதலிய பிறமொழி வாணர்கள் தங்கள் இலக்கியங்களை ஆக்குதற்குப் பெரும்பாலும் அறிவோடு பொருந்தாத கற்பனைகளையே பயில வழங்குவாராயினர். பாற்கடலும் கருப்பஞ் சாற்றுக் கடலும் மேலுலகங்களும், கீழுலகங்களும், அரக்கர்களும், தேவர்களும், பிசாசர்களும் இன்னோரன்ன பொருந்தாப் புனைவுகளை அவர்கள் இலக்கியங்களில் யாண்டுங் காணலாம். பல்லாயிரம் ஆண்டு உயிர் வாழ்ந்திருப்போரையும் பதினாயிரம்மகளிரை மணந்தோர்களையும் அவர்கள் இலக்கியங்களிலே காண்கின்றோம். இப் புனைவுகள் ஆராய்ச்சி அறிவிற்குச் சிறிதும் பொருந்தாத பொய்ப் புனைவுகளேயாகு மன்றோ? நம் சங்க காலத்து இலங்கியங்களிலே இத்தகைய பொருந்தாப் புனைவுகளை யாண்டும் காண்டல் அரிது. ஓரேவழி யாண்டேனும் காணப் படுவனவும் வடவர் கேண்மையானே வந்த சிறிய இழுக்குகளாகவே காணப்படுகின்றன"

இவர்களது கூற்றையோட்டி ஒரு எடுத்துக் காட்டைக் கண்டு நாம் மேற்செல்லுதல் நலம்.

பரண்மேல் ஏறித் தினைப்புனத்தைக் காக்கும் காவலன் ஒருவன் கையில் கவண் கல்லுடன் காட்சியளிக்கிறான். கானுறை மிருகங்கள் சில புனத்துள் நுழைய, கவண் மூலம் கல்லேற்றி விடுக்கிறான். அது வீறுகொண்டு காற்றினும் கடுகி விரைந்தெழுந்து செல்கிறது.

செல்லும் வழியில் உயர்ந்தோங்கிச் செறித்துப் பருத்து நின்ற வேங்கை மரத்து ஒள்ளிய பூக்களைச் சிதறடித்து மிக மெல்லிய ஆசினிப் பழத்தை உதிர்த்து, மாந்துணர்களை உழக்கி, வாழை மடலைக் கிழித்து ஒரு பலாவினுள் தங்கிவிடுகிறது.

கடுவிசையேற்றி விடுத்தனுப்புகின்ற கல், முதற்கண் வீறுகொண்டு விரைந்து செல்லும்; போகிற போக்கின் விரைவில் மெல்லிய வேங்கைப் பூவை உதிர்த்தது விந்தையல்ல. ஆசினிப்பழம் மெத்தென்று நெகிழ்ந்து கொடுத்துத் தரையில் உதிரவா? வேண்டாவா? என்றநிலையில் இருக்கும் பொழுது அவ்வழிப் போந்த இக்கல்லின் கடுவிசைக்கு இலக்காகி வீழ்ந்ததெனின் யாரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று.

தேனிறாவில் எப்பொழுதும் தேன்மண்டித் தண்மையுற்று மென்மை பெற்றுத் திகழும். அது கல்போன்றோ மரம்போன்றோ ஒரு கடினப் பொருளன்று. ஆகவே அதையும்ஊடுருவி மாந்துணர்களை உழக்கியது அந்தக்கல். இதுபோழ்து அதன் வேகம் சற்றுத் தளர்வுற்றது. இருப்பினும் அதன் வேகம் முற்றிலும் ஒடுங்கிவிடவில்லை. ஆகவே அருகிருந்த வாழைமடலைக் கிழித்து.

இப்பொழுது அதன் வீறுதளர்ந்து விழுந்து விடும் நிலையில் சென்றது. எதிரே ஒரு பழுத்த பலா பொத்தென்று நெகிழ்ந்திருந்தது அதன்மேல் பட்ட அந்தக்கல் மிக மென்மையான பலாவுள் நுழைந்து வெளியேவர விறற்று அதனுள்படிந்து தங்கிவிட்டது.

இதுவரை நாம் கண்டது செந்தமிழ் மாமுகில் வள்ளல்களாம் நம் தமிழ்ப் புலவர்களில் ஒருவரது கற்பனை குறிஞ்சிக்கலி மூலம் குவலயத்தில் உலாப் போந்து வலம் வந்து நிற்கிறது.

இனி வான்மீகரது வடமொழிப் படைப்பான இராமன் கம்பரால் தமிழருக்கு அறிமுகப்படுத்தப் பட்ட பெரியமனிதன்.

தையல் சொல்லைத் தகப்பன் சொல்லாகக் கொண்டு மான்பின் சென்ற மனிதகுலத் தோன்றல் இராமன், தானே யாழாய், யாழேதானுய் ஒன்று பட்டுக் கிடந்த இராவணனுடன் போர் முற்பட்டு களத்தில் நிற்கும் கட்டம்.

இருவரும் மூண்டெழுந்து போரிடுகின்ற பொழுது இராமன் எடுத்துத் தொடுத்துவிட்ட அம்பு இராவணனுடைய உடலெங்கும் குடைந்து உயிரைப் பருகிவிட்டு, அந்தணரும் வானவரும் பூமாரி பொழிய பாற்கடலில் நீராடிவிட்டு இராவ ணனது செங்குருதியாகிய கடலின் மேற்பரப்பின் வழியாகப் போந்து மறுபடியும் இராமனது அம்பறாத் தூணியில் எறிக்கொண்டதாம் அந்த அம்பு. (யுத்த காண்டம் 3866)

இளைஞன் ஒருவன் உந்தூர்தியில் (சைகிளில்) ஏறி தன் முழுவலிவுடன் மிதித்துக் காலை நிறுத்திக் கொள்கின்றான். அந்த உந்தூர்தி முதற்கண் வீறு கொண்டு மிகவிரைவுடன் ஓடிப் பின் இயல்பான வேகத்துடன் சென்று, அதற்குப்பின் தளர்ந்து மேலும் சிறிது பொழுதில் நின்றுவிடுகிறது. இவை உலகில் இயல்பாக நடப்பவையே. சிறிது சிந்தித்து நுனித்து நோக்கிக் கண்டால் உண்மை புலனுகும்.

இது போலத்தான் கானவனது கவண்கல் முதலில் வீறுகொண்டுசென்று, பின்னர் இயல்பான விரைவில் சென்று, பின் தளர்ந்து, அதற்கும் பின் வலுவற்றுப் பலாவினுள் தங்கிவிடுகிறது.

கானவன் விட்ட கவண்கல்லின் செய்கை அறி வோடு பொருந்தும் புனைவா? அன்றி இராமனது அம்பின்செய்கை அறிவொடு பொருந்தும் புனைவா?

கானவன்கல் கற்பார்க்கு இன்பூட்டித் தெம்பூட் டுமா? அல்லது அயோத்தி பெற்ற செல்வத்தின் அம்பு கற்றோர்க்கு இன்பூட்டித் தெம்பூட்டுமா?

கலித்தொகை காட்டும் கானவன் கல் கால ஆராய்ச்சிக்குப் பொருந்தித் தழுவிச் செல்லுமா? அல்லது மான்பிடிக்கச் சொன்ன மட மயிலால் (சீதையால்) கானகத்துக் காதலியைப் பறிகொடுத்த வீரனது (இராமனது) அம்புகால ஆராய்ச்சிக்குப் பொருந்தித் தழுவிச் செல்லுமா?

சிந்தனையை ஒன்றி நிறுத்தி நினைத்தெழுந்து நோக்குங்கள். நேரிய உண்மை சிரிதின் மிளிரும்.

எனவே மேற்கண்ட எடுத்துக்காட்டின் மூலம் நம்மவர் - முன்னவர் - இயற்றிய இலக்கியங்கள் இயற்கையொடு நன்கு பொருந்தித் தழுவிச் செல்வ தையும், வடவரின் இலக்கியங்கள் பெரும்பாலும் வெற்றுரவாரத்துடன் விழுமிய கருத்துச்செறி வின்றிஅறிவொடு பொருந்தாப்புனைவாக யாண்டும் நீண்டு செல்வதையும் விளங்கக் கண்டோம்.

இவ்வாறு இயற்கையழகு நன்கு பொருந்தத் தழுவிச் செல்லும் பழந்தமிழ் நூல்களுக்கு உரை யெழுதப் புகுந்த நச்சினார்க்கினியர்,

"ஐயகோ! இந்நூலிடத்து (தமிழ் நூலிடத்து) யாண்டும் பொருந்தாப் புனைவுகள் நம் நூல் (வட நூல்) போலன்றி இயற்கையுடன் ஒன்றுபட்டுத் தழுவிச் செல்லும் பெற்றியுடையவாய் இருந்து நம் மொழியைவிட உயர்ந்து நிற்கிறதே அவ்வாறு மேலோங்கி நிற்கும் மொழியை வாளா விட்டு விடுவதா?" என நினைத்துத் தாம் உரையெழுதப் புகுந்த பொருந்தும் புனைவாகிய நம் இலக்கியங் கட்குப் பொருந்தா உரையைப் புகுத்தி அந் நூலுக்கே மாசு கற்பிக்க முயற்சி செய்திருக்கிறுர் என்று கூறினல் அது குறித்து என்மீது யாரும் காயவேண்டா. அவர் உரையிலிருந்து அவர் எவ் வுள்ளம் படைத்தவர்?

செம்பொருட் செறிவுமிக்க பழந்தமிழ் நூல் களுக்கு உரையெழுதி மொழிக்கு வளமூட்டினரா? அன்றி மொழிக்கு மாசுபல கற்பித்தாரா?

செய்யுள் கிடக்கும் முறையைப் பின்பற்றி செய்யுளுக்கு உரை செய்தாரா? அல்லது தன் கொள்கைகளைப் புகுத்துவதையே நோக்காகக் கொண்டு தனது கருத்துக்கேற்பச் செய்யுளை வெட்டிப் ஒட்டித் தைத்து உரை கண்டாரா?

மரபு முறை தழுவி உரை வகுக்கப்பட்டிருக் கிறது? அன்றிக் கொள்ளக் குறையா ஆரியக் கொள்கைகளை அள்ளி நுழைத்து உரை வகுக்கப் பட்டிருக்கிறதா? என்று காணுதல் வேண்டும்.

இவரது உரையில் உன்னிநின்று ஊன்றிநோக்கி நுழைந்து பயின்ற மறைமலையடிகள் நெஞ்சு பொறுக் கலாற்ருது வெளியிட்டிருக்கும் கீழ்வரும் வாசகத்தை எண்ணுக.

The old commentator Nachinarkkiniar, discarding the simple and natural order andsetting in which the subject matter of the idyll is disposed, has torn the excellently woren fabric of the poet to pieces and glues them again together with his own vapid thought in such a fantastic manner as to make the poem seem most un-natural and its structure highly rediculous.

“பழைய உரையாசிரியான நச்சினர்க்கினியர், எளிமையாகவும் இயல்புபட்ட ஒழுங்குடனும் செல்கின்ற பாட்டினது ஒழுக்கை விடுத்து, தன்உரைக்கு இணங்கப் பாட்டை இணக்குவான் புகுந்து தமக்கு வேண்டியவாறெல்லாம் சொற்களை அலைத்தெடுத்து உரை வகுக்கிருர். சரிகையிட்டுப்பின்னிய பட்டாடையினைத் துண்டு துண்டாகக் கிழித்துச் சேர்த்துத்தைத்து அவம்படுவார் போல, செய்யுட் சொற்ருெடர்களை ஒருமுறையுமின்றித் துணித்துத் தாம் வேண்டியவாறு சேர்த்துப் பின்னி உரை வகுத்து அப்பாட்டை இயல்புக்கு ஒவ்வாததும் நகைப்புக்கு, இடம் தருவதுமாக ஆக்கியுள்ளார்”

மேற்கண்ட உரையைக் கூர்ந்து நோக்குங்கள் நல்ல உயர்ந்த புதிய ஆடையைக்கிழிப்பவர் யாராக இருக்க முடியும்?......?

“வானுற நிவந்த மேல்நிலை மருங்கு” (நெடுநல் வாடை60) என்பது நெடுநல்வாடையில் பயிலப் படும் ஒரு அடி.

உயர்ந்த மாளிகையின் மேல்மாடி நிலா முற்றம் மிக உயர்ந்திருத்தல் இயல்பு. இதற்கு நேரடியான பொருள் வானிடத்து மிக உயர்ந்த மேல்மாடம் என்பது யாரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் கூட.

இனி, இத்தொடருக்கு ஆசிரியர் நச்சினர்க்கினியர் கூறும் உரையைக் கண்டு நகைப்பீர்களா? அன்றி நலம் பாராட்டுவீர்களா? என்பதைக் கீழ் வரும் அவருரைகண்டு முடிவுசெய்துகொள்ளுங்கள்.

“தேவர் ஊரைத் தீண்டும்படி உயர்ந்த மேலாம் நிலத்திடத்து” என்பது அவருரை.

இந்த உரையைக்கண்டு வெதும்பிய போ. வே. சோ, அவர்கள் “தேவரூரைத் தீண்டும்படி உயர்ந்த என வடவர் நெறிபற்றிப்பொருள்கூறினர்நச்சினர்க்கினியர்” என்று கூறுகிருர்.

உயர்ந்த மேல்மாடம் இருக்கத் தேவரூர் எங்கிருந்து வந்தது? அறிவோடு பொருந்தும்கூற்ரு இது? சந்து கிடைத்த இடத்திலெல்லாம் பொருந்தும் புனைவுக்குப் பொருந்தாஉரை வகுத்துத் தமிழ்இலக்கியத்தை மாசுபடுத்திய நச்சினர்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

>○<

இயற்கையோ டியைந்த இருந்தமிழ்

—முதுகண்ணன்—

என்னருமைத் தமிழகத்தீர்! இனிதோம்புந் தமிழணையின்
தன்னருமை வழுவாது தமிழ்காக்குந் தமிழ்மறவீர்!
அன்புநெறி வழுவாம லருந்தமிழப் பெருநெறியில்
இன்பநெறி வளர்த்திட்ட வியற்றமிழப் பரம்பரையீர்!
பொய்ப்பொருளி னுழையாமற் புகழ்பொருளே புரிந்தென்றும்
மெய்ப்பொருளைவளர்த்தோம்பும்வியத்தகுசீர்ப்பெருந்தகையீர்!
எண்ணில்லாப் பெருந்துன்ப மிருந்தாலு மனத்தூய்மை
உண்ணின்று வளர்ப்பதுவே ஒளியறமாம் பெருங்குடியீர்!

எந்நிலத்தும் வழுவாம லிருக்கின்ற வியற்பொருள்கள்
அந்நிலத்தி னொலிக்கின்ற வழகொலியுந் தமிழென்பார்
எந்நிலத்துந் தமையீன்ற வெழிற்பசுவை யிளங்கன்று
அந்நிலத்தி னம்மாவென் றழைப்பதுவுந் தமிழொலியே!

பறந்திருந்து திரிந்தோடிப் பறந்தநிலந் தனிலிறங்கி
இறந்திருந்த பொருள்கடமை யெடுத்தகற்று மெழிற்காகம்
மறந்திருந்த மனத்தவர்க்கு மினப்பண்பு வழுத்திடுவான்
சிறந்திருந்து காகாவென் சிறப்பொலியுந் தமிழொலியுந்
[தமிழொலியே!

பாகாரும் தமிழின்பம் பயக்கின்ற பனிமொழியார்
வாகாருந் தடந்தோளார் வரைமார்பந் தனைமருவி
மாகாத அறநன்கு வழுத்திமகிழ் இசைபோலுங்
கூகூவென் றிசைக்கின்ற குயிற்குரலுந் தமிழ்க்குரலே!

உலகெலாம்;

இயற்கையி னியைந்த வியல்புடை நந்தமிழ்
ஒவ்வொரு துறையிலு மொளிபெறச்
செவ்விய தொண்டு செய்தனங் கடனே!

குறிப்பு:- இக்கவிப்பாவின் தாழிசைகள் மூன்றும் இருபதாம் நூற்ருண்டின் தனிப்பெருங் கவிஞர், பாரதிதாசனூர் அவர்களின் கருத்தோவியத்தைத் தழுவி ஆக்கப்பட்டன.

பெருமை தரும் பண்பு

கரந்தை, கு. சிவா. எம். ஏ.

கணவன்:

மான்போலத் துள்ளியெங்கும் குதித்திடுவாள் பொன்னி!
    மறைகின்றாள் எனைக்கண்டே; என்னத்தை எண்ணி?
தேன்போலப் பேசிஎன்முன் தேர்போல ஆடித்
    தென்றலெனத் திரிவாளைக் காணோமே; ஏடி?

மனைவி:

மீன்புரளும் கண்ணாள்தன் னையறிந்து கொண்டாள்
    மேலைநாள் இல்லாத மிகுநாணம் பெற்றாள்;
நான்கூட நம்மன்றல் முன்னுன்னைக் காணின்
    நாணமது மிகஓடி மறைவேனே, அத்தான்!

கணவன்:

உன்கதையைப் போட்டுவைப்பாய் ஒருபுறத்தில், கண்ணே!
    உடல்தொட்டுத் தலைநீவி மனம்மகிழும் என்பால்
புன்சிரிப்பை வீசிவிட்டுப் புதுக்கதைகள் சொல்லும்
    பொல்லாத பெண்ணாவாள்! அறிவாயே, நீதான்!

மனைவி:

உன்மடியில் புரண்டுருளும் சிறுமியவள், நேற்றாம்;
    ஊரிளைஞர் மணம்நயக்கும் பேரழகி இன்றாம்!
முன்போல உன்னிடத்தில் உறவாடாப் பருவம்,
    முகிழ்நாணப் பெருங்கடலில் மூழ்கும்பொன் னுருவம்!

கணவன்

நெருநலுமென் நேரோடிச் சிறுகுழந்தை போல
    நெடுஞ்சிரிப்பும் கலகலப்பும் நிறைவுற்றாள்; வாலைப்
பருவம்வர வாய்பேசாப் பதுமையே ஆனாள்,
    பதைக்குமுளம்; எனைவிட்டுப் பறித்ததுவோ வெட்கம்?

மனைவி:

பெருமைதரும் பெண்ணுக்கு நாணமெலாம் பண்பாம்
    பெற்றோரோ மற்றோரோ கற்பிக்கா ஒன்றாம்;
அருமைமிகும் நம்நாட்டுப் பெண்கட்குயிர் என்றே
    அதைஎடுத்துச் சொன்னால்தான் அறிவாயோ இன்று!

ஓவியன்

சிற்பி

மோதும் அருவியின் மீதி லெழும்துளி
    முந்தும் கதிரொளி யில்-நறு
    முத்துச் சிதறலைப் போல்-மின்னி
ஓதுபல் லாயிரம் வண்ணங்கள் காட்டிட
    ஓவியன் கண்டுவிட் டான்-அதில்
    உள்ளம் மறந்து விட்டான்!

துள்ளிக் குதித்தெழில் தோயும் [மலர்விழித்
    தோகை மயிலொருத் தி-இடை
    தூக்கும்கு டத்துட னே-வந்து
பள்ளத்து நீரினுள் பாய்ந்தனள்; ஓவியன்
    பார்த்துவிட் டான்அதனை-கையில்
    பற்றினன் தூரிகையை!

கூந்த லவிழ்ந்திடக் கோவ்வையி [தழில்நீர்
    கொப்பளித் தாடுகின் றாள்-உடல்
    கூத்தினைச் செய்யநின் றாள்-அவள்
பூந்துகி லாடை புதைந்தது நீரினுள்,
    புத்துயிர் சிந்த,அ தை-அவன்
    சித்திர மாக்குகின் றான்!

குன்றத்தினை அங்குக்கொஞ்சம்மலரினைக்
    கூன்பிறை நங்கையி னைக்-கனி
    கொத்தும்பறவையி னைக்-கரை
சென்றுதி ரும்பிச்சி ரிக்கும்அ லைகளைச்
    சீர்மிகத் தீட்டுகின் றான்-அந்தச்
    சித்திரம் தீட்டுகை யில்,

திங்குழல் ஒத்ததன் தேன்குர லால்இசை
    தேக்கும் தமிழ்ப்பா டல்-உயிர்
    தீண்டும்சு வைவழிய-இன்ப
மாங்கனி போன்றவள் மக்களி னமன்றி
    மந்தியும் மானின மும்-நிலை
    மாறிடப் பாடுகின் றாள்!

நீலம ணிக்குள் நீரிற்கு ளிப்பவள்
    நெஞ்சம்உ ருகிட வே-பாடும்
    நீளிசை நல்லமு தம்-வண்ணக்
கோலெடுத் தேஎதிர் கொஞ்சும்இ யற்கையைக்
    கொள்ளைவ னப்புட னே-சித்திரம்
    கூட்டுவோன் கேட்டுவிட் டான்!

காணும்இ யற்கையிற் காணாந லத்தையும்
    கற்பனை உள்ளத்தி னால்-கண்முன்
    காட்டும்தி றமுடை யோன்-அந்த
ஊனும்நெகிழ்ந்திடும் தேனிசையை,உயர்
    ஓவியம் ஆக்குவ னோ?-அந்தோ!
    உள்ளம்தி கைத்துவிட் டான்!

≠O≠

குயில்

Regd. No. M. 7030.

காதல்

அவள்மேற் காதல்!

ஓடிவா ஓடிவா ஓடிவா
ஓடிவா வானம் பாடியேவிரைவில்
(ஓடிவா)

வேடிக்கைக் காரி – இங்கு
வாடிகை காரி – உன்னைத்
தேடினேன் ஊரி – லின்பம்
நாடினேன் கோரி விரைவில்
(ஓடிவா)

என் சுவைக் கூட்டு - நின்
செந்தமிழ்ப் பாட்டு நான்
கேட்டுக் கேட்டுக் கேட்டு - வந்தேன்
நல்வழி காட்டு விரைவில்
(ஓடிவா)

பெண் நடக்கு மாம் - கண்ட
அன்னம் சொக்கு மாம் இரு
கண்சி மிழ்க்கு மாம் - அவை
மின்னல் கக்கு மாம் விரைவில்
(ஓடிவா)

இங்கு நிற்கின் றேன் – கண்ணே
எங்கு வைக்கின் ருய்? நீ
அங்கு நிற்கின் ருய் - உன்
அன்பு கேட்கின் றேன் விரைவில்
(ஓடிவா)

குறிப்பு:-
கேட்டுவந்தேன்: கேட்டு உவந்தேன் என்று பிரித்துப் பொருள் கொள்க.

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.